**S.C. No.192/2025**
**P.W. 1 – திரு.அழகுமுருகன்**
**நாள் – 16.03.2026**

( எதிரி ஆஜர். எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

மதுரை மாநகர் வைகை தென்கரை ரோடு, டிவிஎஸ் தோப்பு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள், மக்கள் நடமாடும் பகுதி என்றால், சரிதான், ஆனால் தோப்பிற்கு பின்புறத்தில் வீடுகள் மட்டும் உள்ளது. மேற்படி இடத்தில் தனிநபர் சாட்சிகளை நாங்கள் விசாரிக்கவில்லை.சம்பவத்தன்று ரோந்து பணியில் ஈடுபடுவதற்கு எங்கள் உயர் அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்பட்டதா என்றால், அனுமதி பெறப்பட்டது. சார்பு ஆய்வாளர்களுடன் தான் ரோந்து பணியில் ஈடுபட்டோம், அது சம்மந்தமான குறிப்பு காவல்நிலைய பொது நாட்குறிப்பில் உள்ளது. சம்பவ தேதியில் நாங்கள் ரோந்து பணியில் ஈடுபட்டது சம்மந்தமான மேற்படி குறிப்பை காவல் ஆய்வாளர் விசாரணையில் காட்டவில்லை மற்றும் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் ரோந்து பணிக்கு செல்லாத காரணத்தினால் தான் மேற்படி குறிப்பை காவல் ஆய்வாளர் விசாரணையில் காட்டவில்லை மற்றும் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்து பணியில் ஈடுபட்டதும் எதிரியிடமிருந்து வாள் போன்ற ஆயுதம் கைப்பற்றபட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்தானது ஞாயிற்று கிழமை சந்தையில் எளிதில் கிடைக்கக்கூடியது என்றால், சரியல்ல. நான் சொன்ன நாள் மற்றும் தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அதன் தொடர்ச்சியாக எதிரி கைது செய்யப்படவில்லை என்றும் எதிரியிடமிருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபர பட்டியலுக்காக உயர் அதிகாரிகளின் உத்தரவிற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:47:33 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.